மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். உடல் ஊனமுற்றோரைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழ்நாட்டிலே மொத்தம் 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஒய்வூதியம் என்பதைப் பொறுத்தவரை கிராமப்புறங்களிலே, வெளியிலே வந்து ஏதாவது வேலை செய்ய முடியாத உடல் ஊனமுற்றவர்கள் யாராவது இருந்து ஊருக்குள்ளேயே தங்களுடைய சொந்தக்காரர்களோடு, உறவினர்களோடு வாழுகிறவர்கள் என்றால் அவர்கள் இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு வாழ முடியும் என்கிற ஒரு சூழ்நிலைக்கு வருவதற்காகத்தான் இந்தப் பணம் வழங்கப்படுகிறது. தனியாக உடல் ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு வழங்கிக்கொண்டு இருக்கிறது. இதுசம்பந்தமாக, உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்க அரசு தயாராக இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**91—**

**தொழிற்சாலை**

***7480—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், தோகைமலையில் வெட்டி எடுக்கப்படும் கிரானைட் கற்களுக்குப் மெருகூட்டி விற்பனைக்கு ஏற்ற வகையில் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளித்தலை வட்டம், தோகைமலையில் வெட்டி எடுக்கப்படும் கிரானைட் கற்களுக்கு மெருகூட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

2002 ஏப்ரல் 4]

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை வட்டம், தோகைமலை என்பது பின்தங்கிய பகுதி. அங்கே பல வண்ணங்களில் கிரானைட் கற்கள் எடுக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, டாமின், தனியார்கள் மூலமாக நிரம்பக் கற்கள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் பர்கூரில் ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை தொடங்கியதுபோல, கற்களுக்கு மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்றை தோகைமலைப் பகுதியில் தொடங்கிவிட்டால், அந்தப் பகுதி தொழில் வளம் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அங்கே, பக்கத்திலே இருக்கிற மதுரை வரையிலும்கூட அந்த மெருகூட்டும் தொழிற்சாலை இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியில் அந்த மெருகூட்டும் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க அம்மா அவர்கள் ஆட்சியிலே முயற்சி எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திட்டம் ஏதுமில்லை. மாண்புமிகு அம்மாவின் அரசு சிந்திக்கும்; மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**92—**

**சுகாதாரக் கேடு**

***7086—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரில் அரசுக்குச் சொந்தமான டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரும் நாற்றம் குடியிருப்புப் பகுதி மற்றும் அரசு கலைக் கல்லூரிப் பகுதிகளில் சுகாதாரக் கேடு விளைவிப்பதால் எண்ணெய் சுத்திகரிப்பின்போது வரும் நாற்றத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS